**ஆகஸ்ட் - 8**

**"ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்." - லூக் 10 : 5, 6.**

இப்பொழுதிருக்கிற அறுவடையில் ஒவ்வொரு வேலையாளும் இந்த வாக்கியங்களிலுள்ள கர்த்தருடைய கட்டளையை நன்றாக கவனிக்க வேண்டும். கர்த்தருடைய பிரதிநிதிகள் எங்கெங்கே சென்றாலும், சண்டையும் குழப்பமும், கலகமும், சச்சரவும் அல்ல. சமாதானம் கூட செல்ல வேண்டும். உண்மையாகவே சத்தியம் எதிர்பைத் தூண்டுகிற ஒரு பட்டயமாகக் காணப்படும். இருந்தாலும், எதிர்ப்பையும் பிரிவினையும் உண்டு பண்ணுவது சத்தியமாக இருக்க வேண்டுமேயல்லாமல், கர்த்தருடைய பிரதிநிதியின் எந்தவிதமான மூர்க்கத்தனமான அல்லது அன்பற்ற வார்த்தையாகவோ அல்லது செயலாகவோ இருக்கக்கூடாது. ஜனங்கள் சுறுசுறுப்பாயிருக்கிற இந்நாட்களில், மனிதருக்கு தொந்தரவு கொடுக்க ஏராளமான காரியங்கள் இருக்கின்றன. ஆகையால், சத்தியத்தைப் பெற்றிருக்கிற எல்லோரும் அதன் ஆவியையும் கூடப்பெற்று "யேசு கிறிஸ்துவைக் கொண்டு சமாதானத்தைக் கூற வேண்டும். **Z'04,108(R3346)**

கர்த்தர் எப்பொழுதும் தன்னுடைய ஊழியக்காரருக்காக அவர்களை உபசரிக்க அவர் விரும்புகிற குடும்பங்களில் ஒரு வரவேற்பை ஏற்பாடு செய்கிறார். எங்கேயாகிலும் தன்னுடைய ஊழியக்காரர் வரவேற்கப்படவில்லை என்றால், அவர்களுக்காகக் கர்த்தர் ஒரு ஆயத்தமும் செய்யவில்லை என்று எண்ணி அவ்விடம் விட்டுப் பெயர்ந்து செல்லுதல் அவர்களுக்கு நியாயமாக இருக்கும். அவர்கள் எங்கு சென்றாலும், கர்த்தரின் ஆவியை அங்கே வெளிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உலகப்பிரகாரமான ஆசிர்வாதங்களைவிட மிகவும் சிறந்ததாக இருக்கிற ஆவிக்குரிய ஆசிர்வாதங்களைக் கொடுக்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தங்களுடைய ஆசீர்வாதங்கள் விரும்பப்படாவிட்டால், அல்லது உயர்வாக மதிக்கப்படாவிட்டால், அவைகள் மறுபடி எடுத்துக் கொள்ளப்படுவதாக. தங்களுடைய வருகையை எதிர்பார்த்திருக்கிற ஒரு தகுதியான குடும்பம் வேறு இடத்தில் இருக்கிறது என்ற எண்ணத்தினால் அவர்கள் திருப்தியடைவார்களாக. **- P '35, 117.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1சாமு 25:6,17; ஏசா 9:6; 57:19; மத் 10:11-13; சங் 35:13; 1கொரி 9:4-7; 1தீமோ 5:18; லூக் 19:5-9; அப் 10:36; 2கொரி 5:18-20; எபே 2:2,3; 5:6; 2தெச 3:16; 2கொரி 2:15,16.**

**கோபுர வாசிப்பு : Z '16, 325 (R 5979)**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சமாளிக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?**